# விபர மடல்

2010 புரட்டாதி

## 7-ம் வகுப்பு மாணவர்களுக்கான மூளைச்சவ்வு நோய் தடுப்பூசி மருந்து (Men ACYW-135)

(விபர மடல் பல மொழிகளில் கிடைக்கும்; பார்க்கவும்: http://www.toronto.ca/health/immunization_children/index.htm)

### மூளைச்சவ்வு நோய் அல்லது மூளைச்சவ்வுக் காய்ச்சல் என்றால் என்ன?

- *Neisseria meningitides* என்னும் பற்றுயிரிகளால் மூளை, முள்ளதண்டுக்கொடி என்பவற்றின் குருதியில் அல்லது உள்ளுறையில் பீடிக்கும் நோயே மூளைச்சவ்வு நோய் அல்லது மூளைச்சவ்வுக் காய்ச்சல் எனப்படும்.
- *Neisseria* பற்றுயிரிகள் பல வகைப்பட்டவை. அவற்றுள் A, B, C, Y, W-135 ஆகிய ஐந்து வகைகளும் அநேகமாக எல்லாத் மூளைச்சவ்வு நோய்களையும் உண்டாக்குபவை.
- மூளைச்சவ்வு நோய் அரிதாக உண்டாகும் கடுமையான நோய். ரொறன்ரோவில் ஆண்டுதோறும் 10 முதல் 20 பேரை இது பீடிக்கிறது. இந்நோயினால் பீடிக்கப்படும் 10 பேருள் ஒருவர் இறக்கக்கூடும்.

### மூளைச்சவ்வு நோய் ஒருவரை எவ்வாறு பீடிக்கக்கூடும்?

- முகத்தோடு முகம் வைத்து நெருங்கி உடல்தொடர்புகொள்ளும் பொழுது, முத்தமிடும்பொழுது, உணவு வகைகள், பான வகைகள், இசைக் கருவிகள், தண்ணீர்ப் புட்டிகள், வெண்சுருட்டுகள், நோய்வாய்ப்பட்ட ஒருவரின் வாய்பட்ட வேறு பொருட்கள் எவற்றையும் ஆள்மாறிப் பயன்படுத்தும் பொழுது, உமிழ்நீர் ஊடாக இந்நோய் தொற்றுவது வழக்கம்.
- நோய்வாய்ப்பட்ட ஒருவருடன் ஒரே வகுப்பறையில் கற்பதால் அல்லது ஒரே பேருந்தில் பயணிப்பதால் இந்நோய் தொற்றுவதில்லை.

### மூளைச்சவ்வு நோய்க்கு உள்ளாகும் ஆபத்து யாருக்கு ஏற்படும்?

- இந்த நோய் எந்த வயதினரையும் பீடிக்கவல்லது.
- 5 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள், குறிப்பாக ஒரு வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் இந்நோய்க்கு உள்ளாகும் ஆபத்து மிக அதிகம்.
- பதின்ம வயதினரும், முதிர்ந்த இளையோரும் பற்றுயிரித் மூளைச்சவ்வு நோய்க்கு உள்ளாவதற்கு இதுவே தலையாய காரணம்.
- மண்ணீரல் அற்றவர்களும் நோய்-தடுப்புவலு குன்றியவர்களும் இந்நோய்க்கு உள்ளாகும் ஆபத்து அதிகம்.

### இந்த நோயின் அறிகுறிகள் எவை?

- எவரிலும் அறிகுறிகள் மிகவும் விரைவாகத் தென்பட்டு, அவரை மிகவும் நோய்வாய்ப்படுத்தக் கூடும்.
- அவற்றுள் பின்வரும் அறிகுறிகள் அடங்கும்: திடீரெனப் பீடிக்கும் காய்ச்சல், கடுந்தலைவலி, வயிற்றுச் சுகயீனம், கழுத்துப் பிடிப்பைத் தொடர்ந்து வாந்தி, களைப்பு, ஒளிக்கூச்சம், கிறுதி, சிவப்பு/நாவல்நிறக் கொப்புளம், பரு.

### இந்த நோய்க்கு சிகிச்சை அளிக்க முடியுமா?

- உரியகாலத்தில் மருத்துவ பராமரிப்பு, கிருமியொடுக்கி வகைகள் கொண்டு இதற்குச் சிகிச்சை அளிக்க முடியும்.
- சரியான முறையில் சிகிச்சையளித்தாலும், இது முனைப்படைந்து, கடும் கோளாறுகளுக்கு அல்லது இறப்புக்கு இட்டுச்செல்லக் கூடும்.

### எனது பிள்ளைக்கு மூளைச்சவ்வு நோய் ஏற்படாவாறு பாதுகாப்பது எப்படி?

- உங்கள் பிள்ளைக்கு மூளைச்சவ்வு நோய் தடுப்பூசி ஏற்றுவிக்கவும்.
- A, C, Y, W-135 ஆகிய நால்வகைத் மூளைச்சவ்வு நோய்களும் பீடிப்பதிலிருந்து 98% பாதுகாப்பு அளிக்கும் (Menactra®, Menveo™ ஆகிய) மூளைச்சவ்வு நோய் தடுப்பூசிகள் இரண்டு தற்பொழுது ஒன்ராறியோவில் கிடைக்கின்றன.
- பாடசாலைக் களங்களில் 7-ம் வகுப்பு மாணவர்களுக்கு Men ACYW-135 தடுப்பூசியை இலவசமாக ஏற்றுவதற்கு ரொறன்ரோ பொது சுகாதாரத் துறை (TPH) முன்வந்துள்ளது.
- முந்திய ஆண்டுகளில் C வகை மூளைச்சவ்வு நோய் மட்டும் பீடிக்காமல் பாதுகாக்க ஏற்றப்பட்ட C (Men-C) கூட்டுத் தடுப்பூசிக்குப் பதிலாக இப்பொழுது ACYW-135 தடுப்பூசி ஏற்றப்படுகிறது.

### மூளைச்சவ்வு நோய் ஏற்படாமல் தடுக்கும் வேறு வழிகள் எவை?

- உமிழ்நீர் தொற்றும் கிண்ணங்கள், தண்ணீர்ப் புட்டிகள், உணவுப் பாத்திரங்கள், வேறு பாத்திரங்கள் முதலியவற்றை ஆள்மாறிப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். ஒவ்வொரு தடவையும் இசைக் கருவிகளைப் பயன்படுத்திய பின்னர் அவற்றைச் சுத்தப்படுத்தவும்.

**யார் Men ACYW-135 தடுப்பூசியை இலவசமாக ஏற்றலாம்?**

- ஏற்கெனவே ஒரு தடவையேனும் Men ACYW-135 தடுப்பூசி ஏற்றாத 7-ம் வகுப்பு மாணவர்கள்.
- 7-ம் வகுப்பில் இத்தடுப்பூசியை ஏற்றத் தவறிய 8-ம் வகுப்பு மாணவர்கள், பாடசாலைச் சிகிச்சைக் களம் அல்லது சமூக சிகிச்சைக் களம் ஒன்றில் தடுப்பூசி ஏற்றலாம். ரொறன்ரோ சுகாதாரத் துறையின் இணையத்தளம் சென்று, சிகிச்சைக் களம் கூடும் திகதிகளையும், நேரங்களையும் நிச்சயிக்கவும்.
- உங்கள் குடும்ப மருத்துவரிடம் சென்று Men ACYW-135 தடுப்பூசியை இலவசமாக ஏற்ற முடியாது.

**யார் Men ACYW-135 தடுப்பூசியை ஏற்றக் கூடாது?**

- உங்கள் பிள்ளைக்கு:
  - ஏற்கெனவே Men ACYW-135 தடுப்பூசி (Menactra® அல்லது Menveo™) ஏற்றியிருந்தால்;
  - முன்னர் மூளைச்சவ்வு நோய்க்குத் தடுப்பூசி மருந்து எதுவும் அல்லது மரப்பால் (latex) உட்பட அதன் கூறுகள் எவையும் ஏற்றியபொழுது தகாத (உயிருக்கு ஆபத்தான) விளைவு எதுவும் ஏற்பட்டிருந்தால்,

  இத்தடுப்பூசியை ஏற்றக் கூடாது:
- உங்கள் பிள்ளைக்கு:
  - தடுப்பூசி எதுவும் ஏற்றியபொழுது தகாத விளைவு எதுவும் ஏற்பட்டிருந்தால்;
  - Guillain-Barré Syndrome ஏற்பட்டிருந்தால்;
  - உங்கள் பிள்ளை கருவுற்றிருந்தால்,

  Men ACYW-135 தடுப்பூசி ஏற்ற முன்னர் உங்கள் சுகாதார பராமரிப்பாளருடன் கலந்துரையாடவும்.
- உங்கள் பிள்ளைக்கு காய்ச்சல் அல்லது சிறிதளவு தடிமனை விஞ்சிய கடுமையான சுகயீனம் எதுவும் ஏற்பட்டிருந்தால், பிள்ளை குணமடையும் வரை பொறுத்திருந்த பின்னரே தடுப்பூசி ஏற்ற வேண்டும்.

**மூளைச்சவ்வு நோய் தடுப்பூசி பற்றி நான் வேறென்ன அறிந்திருக்க வேண்டும்?**

- ஒரே ஒரு தடவையே Men ACYW-135 தடுப்பூசி ஏற்ற வேண்டும். எதிர்காலத்தில் அதற்கோர் உந்தூசி (booster dose) ஏற்றவேண்டுமா என்பது பற்றிய தகவல் அறியப்படவில்லை.
- மூளைச்சவ்வு நோய்க்கு C (NeisVac® Menjugate®) கூட்டுத் தடுப்பூசி ஏற்றிய மாணவர்கள் Men ACYW-135 தடுப்பூசி ஏற்ற முன்னர் ஆகக்குறைந்தது ஒரு மாதமாவது பொறுத்திருக்க வேண்டும்.
- ஏற்கெனவே உங்கள் பிள்ளைக்கு மூளைச்சவ்வு நோய்த் தடுப்பூசி எதுவும் ஏற்றப்பட்டிருந்தால், உங்கள் பிள்ளையின் மருத்துவப் பதிவேட்டு விபரங்களைப் புதுப்பிக்கவும்:
  - இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சம்மதப் படிவத்தில் அவ்விபரங்களை இட்டு நிரப்பவும் அல்லது
  - தடுப்புமருந்தீட்டு தகவல் இணைப்பை அழைக்கவும்: 416-392-1250.

**Men ACYW-135 தடுப்பூசி ஏற்றுவதால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகள் எவை?**

- சிலருக்கு தடுப்புசி ஏற்றிய இடம் சிவக்கவும் வீங்கவும் கூடும்.
- ஒருசிலருக்கு கை நோகக்கூடும். கைநோ ஏறத்தாழ ஒரு நாள் வரை நீடிக்கக் கூடும்.
- சிலருக்கு தடுப்பூசி ஏற்றிய பின்னர் கொஞ்ச நேரம் தலைவலி, களைப்பு அல்லது சுகயீனம் ஏற்படக்கூடும்.
- மூச்சுவிடுவதில் சிரமம், தொண்டையிலும் முகத்திலும் பரு அல்லது வீக்கம் உட்பட்ட பக்க விளைவுகள் அரிதாக ஏற்படுவதுண்டு.
- தடுப்பூசி ஏற்றிய பின்னர் கடுமையான விளைவு எதுவும் ஏற்பட்டால், உடனடியாக சுகாதார பராமரிப்பாளர் ஒருவரிடம் செல்லவும்.
- பாடசாலைச் சிகிச்சைக் களங்களில் ரொறன்ரோ பொது சுகாதாரத் துறையின் தாதியாளர்கள் சமுகமளித்திருப்பார்கள். அவர்கள் கடுமையான விளைவுகளைக் கையாளப் பயிற்றப்பட்டவர்கள்.

**எனது பிள்ளைக்கு ஒரே சமயத்தில் இரு தடுப்பூசிகளை ஏற்றுவது பாதுகாப்பானதா?**

- பதின்ம வயதினருக்கென விதந்துரைத்த (ஈரல் அழற்சி B, HPV, ஈர்ப்புவலி-தொண்டைக்கரப்பான்-குக்கல் உந்தூசி போன்ற) வேறு தடுப்பூசிகளை ஏற்றும் அதே சமயத்தில் மூளைச்சவ்வு நோய்க்குத் தடுப்பூசி ஏற்றுவது பாதுகாப்பானதே.

**மேலதிக விபரங்களை நான் எங்கே பெற்றுக் கொள்ளலாம்?**

- ரொறன்ரோ பொது சுகாதாரத் துறையின் இணையத்தளத்தில் இடம்பெற்றுள்ள "Take Your Best Shot" காணொலிப்படம் பார்த்து, மூளைச்சவ்வு நோய் பற்றி மேலும் அறிந்துகொள்ளவும்: (http://www.toronto.ca/health/cdc/grd7_hepb_men/best_shot_dvd.htm)
- ரொறன்ரோ பொது சுகாதாரத் துறையின் தடுப்புமருந்தீட்டு தகவல் இணைப்பை அழைக்கவும்: 416-392-1250.